**OS. 03/2017**

**நாள். 31.03.2022.**

**பி.வா.சா. 1 –** மாயழகு

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யஅனுமதிக்கப்பட்டார்....

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

வாதி மகேஸ்வரி சொத்தில் பாகம்கேட்டு வழக்கு போட்டுள்ளார். மொத்தம் 2 இலக்க சொத்துக்களுக்கு வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். தாவா 1ம் இலக்க சொத்தானது சர்வே எண்.862 3 ஏக்கர், 25 செனட் என்றால் சரிதான். அந்த சொத்து ஆதியில் சிவராமலிங்கத்தேவர் மகன் கண்ணையாத்தேவருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான். சிவராமலிங்கத்தேவர் மகன் கண்ணையாத்தேவருக்கு அச்சொத்து பூர்வீகப்பாத்தியம் என்றால் உயில்வழி பாத்தியமாகும். 1924ம் வருடத்திய உயில் மூலம் பாத்தியப்பட்டது. கண்ணையாத்தேவருக்கு பூர்வீகப்பாத்தியப்பட்டது என்றும் அச்சொத்தை கண்ணையாத்தேவர் 1924 ம் வருடம் ராமுத்தேவருக்கும், தங்கராஜ் தேவருக்கும் உயில் எழுதிவைத்துள்ளார் என்றால் சரிதான். அந்த உயில் பத்திரத்தை நான் படித்துப்பார்த்திருக்கிறேன். அந்த உயில் பத்திரத்தில் ராமுத்தேவருக்கு வாரிசுகள் இல்லை என்றால் தங்கராஜ் தேவர் முழுச்சொத்தையும் அடைந்துகொள்ளலாம் என்றும் ராமுத்தேவருக்கு வாரிசு ஏற்பட்டால் ராமுத்தேவரும், தங்கராஜ் தேவரும் சரிசமமாக பாத்தியம் அடைந்துகொள்ளவேண்டும் என்றும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். ராமுத்தேவருக்கு வாரிசு உண்டா இல்லையா என்று எனக்கு தெரியாது. தங்கராஜ்தேவருக்கு உரிய பாதி பங்கில் அவருடைய வாரிசுகளுக்கு பங்கு பாத்தியம் உள்ளது என்றால் சரிதான். தங்கராஜ்தேவருக்கு கண்ணுச்சாமி தேவர் ஒரே மகன் என்றால் சரிதான். கண்ணுச்சாமி தேவரின் மகள் தான் இந்த வாதி மகேஸ்வரி என்றால் சரிதான். வாதி மகேஸ்வரி உடன் பிறந்தவர்கள் நாகநாதன், சேதுராஜன், முனியசாமி, மாரிஸ்வரன், நம்புக்குமார் என்றால் சரிதான். அதில் நாகநாதன் தான் 1ம்பிரதிவாதி என்றால் சரிதான். சேதுராஜனின் வாரிசுகள் 2 முதல் 6 பிரதிவாதிகள் என்றால் சரிதான். முனியசாமியின் வாரிசுகள் தான் 7 முதல் 10 பிரதிவாதிகள் என்றால் சரிதான். கண்ணுச்சாமிதேவருக்கு தாவா சொத்துக்களில் பட்டா கிடைத்ததா என்ற விவரத்தை

பார்த்தேனா என்றால் கண்ணுச்சாமி தேவருக்கு 44 இலக்க சொத்துக்கள் இருக்கிறது. அந்த 44 இலக்க சொத்துக்களுக்கு பட்டா யார் பேரில்உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. கண்ணுச்சாமி தேவர் எப்போது இறந்தார் என்று சரியாக தெரியாது. 44 இலக்க சொத்துக்களுக்கு கண்ணுச்சாமிதேவர் மற்றும் அவருடைய வாரிசுகள் பேரில் தான் கூட்டாக பட்டா இருந்தது என்றால் அது எனக்கு தெரியாது. கண்ணுச்சாமி தேவர் அவருடைய வாரிசுகளை மறைத்துவிட்டு அவர்கள் பெயரில் இருந்த பட்டாவை மறைத்து 1995 ல் 13 ம் பிரதிவாதி டிரஸ்டுக்கு கிரயம்கொடுத்துவிட்டார் என்றால் வாரிசுகளை அவர் மறைக்கவில்லை. ஆனால் அவர் 1995 ல் கிரயம் கொடுத்துவிட்டார். 13 ம் பிரதிவாதி தாவா 1 ம்இலக்க சொத்தில் மொத்தம் 3 ஏக்கர், 25 சென்டில், 2 ஏக்கர் 25 சென்டை கிரயம் வாங்கிவிட்டார் என்றால் சரிதான். அந்த கிரயச்சொத்து போக மீதி இடத்தை 15 ம்பிரதிவாதி நம்புபிச்சை கிரயம் வாங்கிவிட்டார். ராஜாவிடமிருந்து 15 ம் பிரதிவாதி நம்புபிச்சை கிரயம் வாங்கியுள்ளார். நான் 15 ம் பிரதிவாதி நம்புபிச்சையிடமிருந்து 5 1/2 சென்டை கிரயம் வாங்கினேன். 13 ம் பிரதிவாதி டிரஸ்ட் சொத்தை கிரயம்கொடுப்பதற்கு முன்னால் நீதிமன்றத்தில் அனுமதி வாங்கியுள்ளாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சாட்சியம் கூறியுள்ள 17 முதல் 20, 22, 24, 25, 30, 35, 38 முதல் 40, 43, 56 முதல் 58 பிரதிவாதிகள் அனைவரும் ராஜா மற்றும் நம்புபிச்சையிடமிருந்து கிரயம் வாங்கிய நபர்கள் ஆவார்கள். 13 ம்பிரதிவாதி டிரஸ்ட் சொத்தை கிரயம் கொடுப்பதற்கு முன்னால் லேஅவுட் போட்டுள்ளார்களா என்றால் அதைப்பற்றி தெரியாது. தாவா 1 ம்இலக்க சொத்து கண்ணுச்சாமி தேவருக்கும் அவருடைய வாரிசுகளுக்கும் பாத்தியப்பட்ட சொத்து என்றும் அவர் மற்ற வாரிசுகளை மறைத்து 13 ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்திருப்பது சட்டப்படி செல்லாது என்றும் சொன்னால் சரியல்ல. 13 ம்பிரதிவாதி டிரஸ்ட் என்பதால் நீதிமன்ற அனுமதி பெற்றுத்தான் மற்றவர்களுக்கு கிரயம்கொடுக்க முடியும் என்றும் சொன்னால் சரியல்ல. மொத்த சொத்தையும் கிரயம் வாங்கிய நபர்கள் அனைவரும் தனித்தனியாக அடைத்து வீடுகட்டி குடியிருந்து அனுபவம் செய்து வருகிறார்கள். நான் சொல்வது போல தாவா சொத்தில் வீடு எதுவும் இல்லை என்றும் காலியிடமாகத்தான் உள்ளது என்றும் வழக்கிற்காக பொய்யாக வீடு இருப்பதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. கண்ணுச்சாமி தேவருக்கும் அவரது வாரிசுகளுக்கும் கூட்டு அனுபவ பாத்தியம் உள்ள நிலையில் பிரிக்கப்படாத

சொத்தை பொறுத்து ஏற்பட்ட கிரயங்கள் செல்லாது என்றும் வாதியின் பங்கு பாத்தியத்தை மேற்கண்ட கிரயங்கள் கட்டுப்படுத்தாது என்றும் சொன்னால் சரியல்ல.